2024 – டிசம்பர் மாதம் 17– ஆம் தேதி செவ்வாய்க்கிழமை

தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், பெரம்பலூர்.

*எம்.சி.ஓ.பி. நெம்பர் : 23 / 2023*

*2024–ம் ஆண்டு டிசம்பர் மாதம் 17– ஆம் தேதி செவ்வாய்க்கிழமை மனுதாரர்/எதிர்மனுதாரர் தரப்பு சாட்சியாகிய R W 1, வது நபரின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டின் 54–வது விதியின் 9 –வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திருமதி. N. லலிதா,* Gr.II Bench Clerk *அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.*

| | | |
|---|---|---|
| பெயர் | : | R W 1, மனோகரன் |
| தகப்பனார் பெயர் | : | நல்லையய்யன் |
| ஊர் | : | பெரம்பலூர் |
| வட்டம் | : | பெரம்பலூர் |
| மாவட்டம் | : | பெரம்பலூர் |
| தொழில் | : | கணக்கர், வட்டாரப்போக்குவரத்து அலுவலகம், |
| வயது | : | 29 |

<u>தேதி: **17.11.2024.**</u>

<u>**முதல் விசாரணை:-**</u>

நான் தற்போது பெரம்பலூர் வட்டாரப்போக்குவரத்து அலுவலகத்தில் கணக்கராக பணிபுரிந்து வருகின்றேன். நீதிமன்ற அழைப்பாணையின் பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். சாட்சியம் அளிக்க எனக்கு வழங்கப்பட்ட அனுமதிக்கடிதம் **எ.சா.ஆ.1,** 1–ம் எதிர்மனுதாரரின் இருசக்கர வாகனத்தின் பதிவு எண் T N 46 Z 7670 என்ற வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை **எ.சா.ஆ.2,** அந்த வாகனத்தை ஓட்டிச்சென்ற மனோஜ் என்பவரின் ஓட்டுநர் உரிமம் தாக்கல் செய்யவில்லையென்பதால் அவருக்குசோதனை அறிக்கை வழங்கப்பட்டு ரூ.5,000/– அபராதம் விதிக்கப்பட்டு அவரே அபராதத்தை செலுத்தி வாகனத்தை எடுத்துச்சென்றுள்ளதற்கான அபராத ரசீது **எ.சா.ஆ.3.** மனோஜ் என்பவரின் பிறந்த தேதி மற்றும் ஆதார் அடையாள அட்டையை வைத்து எங்கள் அலுவலகத்தில் பரிசோதனை செய்த பார்த்த போது அவருக்கு ஓட்டுநர் உரிமம் இல்லை. மனுதாரரின் வாகனமான T N 46 X 1605 என்ற இருசக்கர வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை **எ.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகின்றது.

**குறுக்கு விசாரணை:- ( மனுதாரர் தரப்பில்)**

மேற்படி இருசக்கர வாகனத்தை ஓட்டிச்சென்ற மனோஜ் என்பவரின் பிறந்த தேதி ஆதார் அடையாள அட்டையை பரிசோதித்து பார்த்த போது எங்கள் அலுவலத்தில் அவருக்கு ஓட்டுநர் உரிமம் வழங்கப்படவில்லை. மனோஜ் என்பவரின் பிறந்த தேதிக்கு ஆவணமாக கல்விச்சான்றிதழ் ஏதேனும் இணைத்து அனுப்பவில்லை. அவருடைய பிறந்த தேதி சரியான தேதியா, தவறான தேதியா என்று எனக்கு தெரியாது. தேதி தவறாக இருக்கும் பட்சத்தில் வேறு வட்டாரப்போக்குவரத்து அலுவலகத்தில் அவருக்கு ஓட்டுநர் உரிமம் வழங்கப்பட்டிருந்தால் அது பற்றி எனக்கு தெரியாது. மோட்டார் வாகன ஆய்விற்க்கு வரும் போது சமர்ப்பிக்கப்படவில்லையென்பதற்காக தான் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. ஓட்டுநர் உரிமம் இல்லையென்பதற்காக அபராதம் விதிக்கப்பட்டுள்ளது என்று எங்கும் குறிப்பிட்டு கூறப்படவில்லையென்றால் சரிதான்.

**மறு விசாரணை:- இல்லை.**

**ஒப்பம்/-சி. சங்கர்,**
**தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர்,**
**பெரம்பலூர்.**